








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 15.02.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்













## தமிழக நிகழ்வுகள்

- **பதினெட்டாவது தமிழ் இணைய மாநாடு – 2019** (Tamil Internet Conference – 2019) சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் வரும் **செப்டம்பர் 20 முதல் 22ம்** தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. உத்தமம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம், இணைந்து நடத்தும் இந்த மாநாடு **"தானியங்கி கருவிகளில் தமிழ்மொழிப் பயன்பாடு"** என்ற கருத்துருவுடன் நடைபெறவுள்ளது.

- **தமிழகத்தில், சர்வதேச அளவிலான நவீன கால்நடைப் பூங்காவானது,** சேலம் மாவட்டம் **தலைவாசலில்** 900 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 396 கோடி செலவில் அமையவுள்ளது.
    - இப்பூங்காவானது, நாட்டு இன கால்நடைகளின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

## இந்திய நிகழ்வுகள்

- நாட்டின் இரண்டாவது **"மின்னணு தொழில் முனைவோர் பூங்காவது"** (Electropreneur Park), ஒடிசா மாநிலத்தின் புவனேஸ்வர் நகரில் தொடங்கப்படவுள்ளது.
    - இப்பூங்காவானது இந்திய மென்பொருள் தொழில்நுட்ப பூங்கா (STPI) அமைப்பின் கீழ் செயல்படவுள்ளது.
    - நாட்டின் முதலாவது **"மின்னணு தொழில் முனைவோர் பூங்காவை"** டெல்லி பல்கலைக்கழகம் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

- **சுற்றுச்சூழல் மாசுபடுவதை தடுப்பதற்கான இந்திய – ஜெர்மன் சுற்றுச்சூழல் மாநாட்டின் 3வது பதிப்பு** (3rd Indo – German Environment Forum) **புதுடெல்லியில்** நடைபெற்றது.
    - இம்மாநாட்டின் மையக் கருத்து (Theme):- "Cleaner Air, Greener Economy" என்பதாகும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **எம்.ஆர்.எ.ஃப் சாலஞ்ச் பட்டத்தை** (MRF Challenge title) வென்ற **முதல் பெண் ஓட்டுநர்** எனும் பெருமையை இங்கிலாந்தின் **ஜாமி**

**சாட்விக்** (Jamie Chadwick) பெற்றுள்ளார்.

- ○ சென்னையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், இவர் இந்த சாதனையைப் படைத்துள்ளார்.

## விருதுகள்

- **இஸ்ரேல்** நாட்டின் உயரிய விருதான **"மில்லியன் டாலர் டான் டேவிட் பரிசு"** (Million Dollar Dan David Prize), இந்தியாவைச் சேர்ந்த வரலாற்று அறிஞர் **சஞ்சய் சுப்ரமணியத்திற்கு** வழங்கப்பட்டுள்ளது.
  - ○ அவரது **"Intercultural encounters between Asian Europeans and People of North and South America during the early Modern Era"** என்ற வரலாற்று ஆராய்ச்சிக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- **கேரளாவில் "கார்த்தியாயினி"** என்ற 96 வயது மாணவி **காமன்வெல்த்தின், கற்பதற்கான நல்லெண்ணத் தூதராக** (Commonwealth of Learning Goodwill ambassador) நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ இவர் கேரளாவின் அக்சரலக்ஷம் எழுத்தறிவு திட்டத்தில் 100-க்கு 98 மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தவர். காமன்வெல்த் கற்பித்தல் அமைப்பானது 53 உறுப்பினர் நாடுகளின் மத்தியில் தொலைதூரக் கல்வியையும் திறந்தவெளிக் கல்வியையும் ஊக்குவிக்கின்றது.

## முக்கிய தினங்கள்

- **அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினம் - பிப்ரவரி 11** (International Day of women and Girls in Science)
  - ○ அறிவியல் மற்றும் ஆராய்ச்சிகளில் பெண்கள் மற்றும் சிறுமிகள் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 11ம் தேதியை அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சர்வதேச தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

- இத்தினத்தின் இந்த ஆண்டின் (2019) கருத்துரு:- **"உள்ளடங்கிய பசுமையான வளர்ச்சியுடன் அறிவியலில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் வளர்ச்சிக்காக முதலீடு செய்தல்"** என்பதாகும். (Investment in women and Girls in Science for Inclusive Green Growth)

We Shine Academy™